[20th January 1964

துகள் இத் திட்டத்திற்காக உதவி கேட்டால், மானியமாகவோ, அல்லது பாதிக் கடனாகவும், பாதி மானியமாகவும் கொடுப்பதற்கு அரசாங்கம் முன்வருமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: ஏற்கெனவே கூறியபடி, எங்கெங்கே அவசியமோ, அங்கெல்லாம் சாங்ஷன் செய்து கொண்டு வருகிறோம். பாதி மானியம் கொடுப்பதைப் பற்றி கனம் அங்கத்தினர் குறிப்பாகக் கூறினால், அது பரிசீலிக்கப்படும்.

திரு. அ. தியாகராஜன்: எங்கே அவசியமாக இருக்கிறதோ, அங்கே இந்தப் பாதாள சாக்கடை திட்டம் ஏற்படுத்தப்படுமென்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். திருச்சி மாவட்டத்தில் புதுக் கோட்டையில், பாதிப் பகுதியில் சாக்கடைத் திட்டம் நிறை வேற்றப்பட்டிருக்கிறது. பாதிப் பகுதியில் நிறைவேற்றப்படாமல் இருக்கிறது. இது குறித்து அங்கேயுள்ள சேர்மன் அவர்களும் டெபுடேஷன் வந்து அரசாங்கத்திடம் கடன் கேட்டார்கள். அரசாங்கம் அதை நிராகரித்தது. இப்பொழுது ஏ-கிரேடு முனிசி பாலிடி ஆக்கப்பட்டதன் காரணமாக, இந்தத் திட்டத்தை சாங் ஷன் செய்வதற்கு அரசாங்கம் முன்வருமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: தனிக் கேள்வி போட வேண்டும்.

திரு. நா. ப. செங்கோட்டுவேலு: சேலம் நகரத்தில் பாதாள சாக்கடை அமைக்க உதவி கோரி நகரசபையாரிடமிருந்து மனுக் கள் வந்திருக்கின்றனவா? அதன் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

MR. SPEAKER: The Hon. Minister cannot have all details about all municipalities here and now.

Questions are over.

[*Note.*—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

II—POINT OF ORDER—NON-UTILIZATION OF ONE FULL HOUR FOR QUESTIONS.

திரு. செ. மாதவன்: கனம் தலைவர் அவர்களே, ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், நமது சட்டசபை விதிகள் 22-வது விதியின்படி ஒரு மணி நேரம் கேள்வி நேரமாக இருக்க வேண்டும். இன்று கேள்வித் தாளில் கொடுக்கப்பட்ட கேள்விகளே குறைவு. அதிலும் 6 கேள்விகள்தான் பதிலளிக்கப் பட்டிருக்கின்றன. இதை அதிகப் படுத்த முடியாமைக்குக் காரணம், பெரும்பான்மையான கேள்வி களுக்கு அரசாங்க இலாகாக்கள் பதில் அனுப்ப முடியாமல் இருப் பதுதான். ஆகவே இதை ஒழுங்குப் பிரச்னையாக எடுத்துக் கொண்டு, குறிப்பிட்ட காலத்திற்குள் பதில்கள் வருவதற்கும்,

20th January 1964] [திரு. செ. மாதவன்]

கேள்வி நேரத்தை ஒரு மணி நேரம் ஆக்குவதற்கும் தாங்கள் நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

Mr. SPEAKER : We had question time for one and half hours on some days. At that time the hon. Member had not raised any point of order. Now simply because answers to some questions are not ready, the hon. Member is raising the issue. There is no point of order in this.

III—EXPLANATORY STATEMENT BY A MEMBER *re* : THE BEHAVIOUR OF A POLICE CONSTABLE.

* திரு. வை. சங்கரன் : கனம் சபாநாயகர் அவர்களே, ஜனவரி 18-ம் தேதி என்னைப் பற்றிய ஒரு சம்பவம் பற்றி இந்த சபையின் மேஜையின் மீது ஒரு அறிக்கை வைக்கப்பட்டுள்ளது. அதைப் பற்றி "பை வே ஆஃப் பெர்சனல் எக்ஸ்பிளனேஷன்" நான் சில வார்த்தைகள் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த சம்பவம் சம்பந்தமாகப் பூரா விவரங்களையும் சுருக்கமாகச் சொல்லக் கடமைப்பட்டுள்ளேன்.

இந்தச் சம்பவம் 'க்ளோஸ்டு ஃபார் வெகிகுலர் டிராபிக்" என்று போடப்பட்ட மேலக் கோபுர வாசலில் நடந்ததாகச் சொல்லுவது சரியல்ல. அதற்கு வெளியிலுள்ள மேல ஆவணி மூல வீதியில் நடந்தது. அந்த இடத்திலே எந்தவிதமான கட்டுப்பாடும் கிடையாது. அந்த இடத்திலே ரிக்ஷாவை நிறுத்திவிட்டு, கோவிலுக்கு நடந்து செல்வதற்காக இறங்க நினைத்தேன். அப்பொழுது அங்கிருந்த டின். நம்பர் 135 கான்ஸ்டபிள், ரிக்ஷாக்காரனின் முதுகைப் பிடித்துத் தள்ளினார். "நான் இறங்கி கொள்கிறேன்" என்று சொன்னபோதும், பழையபடி ரிக்ஷாக்காரனைத் தள்ளியதால், வெளியூர் கான்ஸ்டபிள் என்று நான் தெரிந்து கொண்டதால் "நான் லோகல் எம்.எல்.ஏ., இறங்கிக் கொள்ளுகிறேன்" என்று சொன்னேன். "எம்.எல்.ஏ. யாயிருந்தால் என்ன, யாராய் இருந்தால் என்ன" என்று அவர் உரக்க கூறினார். பக்கத்திலே 20, 30 பொது மக்கள் கூடிவிட்டார்கள். "இந்த மாதிரி அவமரியாதையாகப் பேசினால், மேலதிகாரிகளிடம் நான் கம்பிளெயின்ட் செய்வேன்" என்று சொன்னேன். திரும்பவும் அவர் "எம்.எல்.ஏ. யாயிருந்தால் என்ன, யாராய் இருந்தால் என்ன" என்று சொன்னார். நான் அவருடைய நம்பர் என்ன, கம்பிளெயின்ட் செய்யப் போகிறேன், என்று சொன்னேன். அதற்கு அவர் "ரிக்ஷாவை சார்ஜ் செய்திருக்கிறேன், ரிக்ஷாவைப் போலீஸ் ஸ்டேஷனுக்கு கொண்டு போக வேண்டும்" என்றார். இருவரும் பக்கத்திலுள்ள போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்றோம். அங்கே போய் பத்து பதினைந்து நிமிடங்களில் நான் ஒரு கம்பிளெயின்ட் எழுதினேன். அதற்குள் ஊரிலே வதந்திகள் பரவியதால், ஏ.எஸ்.பி. அவர்களும் அங்கே வந்து விட்டார். அவரிடம் கம்பிளெயின்டைப் பூர்த்தி செய்து கொடுத்தேன். ஆகவே, இந்த அறிக்கையில்